**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　தேதி: 01.12.2022
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 112-வது மாணவர் மன்ற தொடக்க விழா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 112-வது மாணவர் மன்ற தொடக்க விழா பல்கலைக்கழக கலையரங்கத்தில் 30.11.2022 அன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர்.வெ.கீதாலட்சுமி அவர்கள் வருகை புரிந்து விழாவைச் சிறப்பித்தார்.அவரது சிறப்புறையில் மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில் இதுபோன்ற பல்வேறு மன்ற செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்திக் கொள்ள அறிவுறுத்தினார். மேலும், அவர் தனது வேளாண் கல்லூரி அனுபவங்களையும் மாணவர்களிடையே பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக முதன்மையர்கள், முனைவர்.ந.வெங்கடேச பழனிச்சாமி, முதன்மையர் (வேளாண்மை), முனைவர்.நா.மரகதம், முதன்மையர் (மாணவர் நலம்), முனைவர்.பெ.ஐரின் வேதமோனி, முதன்மையர் (வேளாண் தோட்டக்கலை), முனைவர்.ந.செந்தில்,முதன்மையர் (வேளாண் முதுகலை), முனவைர்.அ.ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்) ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மேலும், இந்நிகழ்ச்சியில் மாணவர் மன்ற ஆலோசகர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் மன்ற செயலர் செல்வன்.ப.அரவிந்குமார் வரவேற்புரையாற்ற மாணவர் மன்ற துணைச் செயலர்கள் செல்வி.கு.சௌபர்னிகா மாணவர் மன்ற அறிக்கை வழங்கினார். இறுதியாக செல்வன் A.அன்பரசன் நன்றியுரை ஆற்ற விழ இனிதே நிறைவுற்றது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**